**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 23/2020</u>**

**<u>நாள் – 19.12.2024</u>**

| | | | |
|---|---|---|---|
| **PW – 1** | : | வள்ளியம்மாள் | : |
| **க/பெ.** | : | லேட்.சுப்பிரமணியன் | : |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of December 2024)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கை 12 வருடம் கழித்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது அறியாமையினால் உரிய காலத்தில் நான் இந்த மனுவை தாக்கல் செய்ய முடியவில்லை. மேற்படி காரணத்தை எனது மனுவிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் இறந்து போன எனது மகன் ஞானமூர்த்தி என்பதை காலம் எண்.1–ல் வள்ளியம்மாள் என்று சொல்லியுள்ளோம் என்றால் அது தட்டச்சு பிழையால் சொல்லப்பட்டுள்ளது. அதேபோல் இந்த மனுவில் காவல் நிலையத்தின் பெயரையும் தவறுதலாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. எனது இரண்டாவது மகன் கடை வைத்து நடத்தி வருகிறார். இரண்டாவது மகன் தான் என்னை தற்போது பராமரித்து வருகிறார் என்றால் இல்லை. எனது மகன் ஞானமூர்த்தி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிரான குற்றவழக்கில் அவர் குற்றவாளி என்று தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

2. விபத்து நடந்த சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. 10 வருட காலமாக நான் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான்

விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். உரிய காலத்தில் இந்த மனுவை தாக்கல் செய்தால் எனது மகனின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் காலம் கடந்து இந்த இழப்பீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு 1–1/2 ஏக்கர் விவசாய பூமி உள்ளது. அந்த நிலம் தரிசாக தான் உள்ளது. எனது மகன் திருப்பதி ஸ்பின்னிங் மில்ஸ்ஸில் வேலை பார்த்து வந்தார். அவருக்கு வரவேண்டிய வருங்கால வைப்பு நிதியை நான் வாங்கி விட்டேன். நான் எனது மகனின் இறப்பிற்கு மாதம் ரூ.1,000/– ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனது மகன் மாதச் சம்பளமாக ரூ.5,856/– வாங்கி வந்ததாக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தானது எனது மகனின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்பதாலும், காலம் கடந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாலும் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. அதேபோல் எதிர்மனுதாரர் எந்தவொரு இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2024.12.20 09:58:10 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**